**தலைப்பு 248 – மதுவரித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள், மற்றும் வருடாந்த பாதீட்டின் 3.1.1, 3.1.2 மற்றும் 3.1.3 அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்ட வருமான குறியீட்டுக்குரிய 2 வருமான கணக்குகளும் திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு விடயப் பரப்பு

---

தலைப்பு 248 – மதுவரித் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 12 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும்

பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மதுவரித் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கு நடவடிக்கைகளின் தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரால் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் பந்தி தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல் | 1. பெறுகை நடவடிக்கைகள் போதியளவான பிரகாரம் திட்டமிடப்படாமை. | 2.2 |
| | | 2. மிகை நிதிஏற்பாடு | 2.7 |
| | | 3. செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்தலில் குறைபாடு | 2.1.1 |
| | | 4. எதிர்பார்த்த வெளியீட்டு மட்டம் பெறப்படாமை | 2.1.2(அ)(ஆ) |
| | | 5. செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் தாமதம் | 2.1.2(இ) |
| | | 6. பெறுகைகள் செயல்முறைகளை அமுல்படுத்துவதில் குறைபாடு | 2.2 |

| | | | |
|---|---|---|---|
| | | 7. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைதல் | 2.1.2(ஈ) |
| | | 8. உள்ளகக் கணக்காய்வின் குறைபாடு | 2.14 |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசிக் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும் | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை. | 2.12 |
| | | 2. இணங்காமைகள் | 2.13 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைபாடு | 2.9 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | 1. சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடு | 2.3 |
| | | 2. நட்டமும் இழப்பும் | 2.4 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஓ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | 1. முகாமைத்துவ நலிவுகள் | 2.5 |
| | | 2. சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் | 2.6 |
| நிதிப்பிரமாணம் 128(2) வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கு நடவடிக்கைகளின் தன்மை | | | |
| நிதிப்பிரமாணம் | | | |
| 128(2((ஓ) | தேவையான இடத்தில் பொருளாதார நிலைகளிலும் பிற நிலைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கவனித்துக் காலத்துக்குக் காலம் வரிகள், கட்டணங்கள் முதலியவற்றின் வீதங்களும் செலவுப் பணங்களும் அறவீடு மீளாய்வு செய்யப்பட்டு அவற்றை மீள அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதையும். | வருமான தளம்பல்கள் தொடர்பாக தாக்கம் செலுத்தும் விடயங்கள் தொடர்பாக பகுப்பாய்வு செய்யாமை | 2.8(அ)(ஆ) |

## 2. போதியளவானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள மதுவரி வெகுமதி நிதியத்தில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தின் 5 பிரதான பணிகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் தொடர்பாக மாத்திரம் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை அதிகாரச்சட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய 16 பிரதான பணிகள் காணப்பட்ட போதும் அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்குரிய செயற்பாடுகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருடாந்த செயற்பாடுகளுக்காக தேவையான கட்டுநிதி தொடர்பாக திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.2 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தால் 08 பிரதான பணிப்பொறுப்புக்களில் 5 பணிப்பொறுப்புக்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பெறுகைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றுவதற்கு முடியாமையின் காரணமாக 3 பிரதான பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 111 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெறப்படாமை**

மதுவரிக்குரிய (மதுபானம்) மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய 3 ஆண்டுகளுக்காகவும் சேகரிக்கப்பட்ட தேறிய வருமான பரீட்சிப்பின் போது 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே 52 சதவீதத்தாலும் மற்றும் 14 சதவீதத்தாலும் வருமானம் அதிகரித்திருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது 6 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.

**(இ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

திணைக்களத்தால் சிலாபம், அம்பாறை மற்றும் கண்டி பிரதேச அலுவலகங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 191.83 மில்லியன் கூட்டுத்தொகையான மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் 2018 மார்ச் மாதம் வரையில் பூர்த்தி செய்வதற்கு எதர்பார்த்து ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 வரையில் ரூபா 81.66 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 42.81 மில்லியன் பட்டியலுக்காக பணம் செலுத்தாமையினால் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்ளுதல்**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிரல் 2030 இன் பிரகாரம் அடையப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளல் தொடர்பாக திணைக்களம் தெளிவுபடுத்தாதிருந்ததுடன் அது தொடர்பாக நிதிஏற்பாடு

ஒதுக்கியமையால் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2018 யூன் 30 ஆந் திகதி வகையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 பெறுகைத் திட்டம்

வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 282 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) பெறுகைத் திட்டம் தயாரிக்கும் போது மாதிரிகள், திட்டங்கள் அட்டவணை போன்றவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 6,350,000 தொகையான சீருடைத் துணிகள் மற்றும் பாதணிகள் கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கைகள் 2017 மார்ச் மற்றும் மே மாதம் அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் கூறுவிலை கோரல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தில் கட்டிடம், வாகனம், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பயிற்சியளித்தல்களுக்குரிய பெறுகை நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் மூன்றாம் காலாண்டு இறுதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2017 ஆம் ஆண்டின் பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் பாதுகாப்பான ஸ்டிக்கரை வழங்குவதற்காக ரூபா 228,203,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதியமைச்சினால் இதற்குரிய பெறுகை பெறுமதி ரூபா 1,782,624,000 ஆக 681 சதவீதத்தால் அதிகரித்த வகையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) கிரயம் மற்றும் செயற்றிறன் அற்ற சொத்துக்களை அகற்றுதல்**

பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் மூலம் சிபாரிசு செய்யப்பட்ட ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 9 உடைந்த வாகனங்களை அகற்றுவதற்கு 2018 யூன் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2018 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு

சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பிரதேச அலுவலகங்கள் மற்றும் பிரதான அலுவலகங்களின் சில பிரிவுகளை உள்ளடக்கிய 22 அலுவலகங்களின் மெய்மையாய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 நட்டமும் இழப்பும்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்கும் செயன்முறைகள், மதுபானம் உற்பத்தி செய்யும் செயன்முறைகள் மற்றும் வரி கணிப்பீடு செய்யும் செயல்முறைகள் என்பவற்றை முகாமைத்துவம் செய்வதற்காக கணனி மென்பொருள் முறைமையொன்று வடிவமைக்கும் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 128,000 (அறிவித்தல் கட்டணம் மற்றும் உபசரிப்பு செலவினம்) தொகை செலவிடப்பட்டிருந்தது. பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றதையடுத்து பெறுகை குழுவினால் இது ஆலோசனை சேவை பெறுகையாக அவதானிக்கப்பட்டு அதற்காக மீண்டும் கூறுவிலைகோருவதற்கு தீர்மானிக்கப்பட்டமையின் காரணமாக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) மதுபான போத்தல்கள் மற்றும் மதுபான போத்தல்களுடன் அண்மித்த உற்பத்திகளுக்காக பாதுகாப்பு ஸ்டிகர் வழங்கல், பாதுகாப்பு ஸ்டிகர் முகாமைத்துவ முறையினை வழங்கல், ஸ்தாபித்தல் மற்றும் பேணிச் செல்லல் போன்றவைகளுக்காக பெறுகைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்காக அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2016 திசெம்பர் 08 ஆம் திகதிய 16/2556/719/153/TBR ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின்படி தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர், ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுமுயற்சியாக கருதுவதற்கு தேவையான சட்டரீதியான தேவைகளை பூர்த்தி செய்யாமையினால் நிராகரித்து மீண்டும் கேள்விகோருவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீண்டும் அமைச்சின் கேள்விகோரல் மூலம் மேற்கூறப்பட்ட கேள்விதாரரே தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது மேற்கூறப்பட்ட கேள்விதாரர் 1000 ஸ்டிகர்களுக்காக சமர்ப்பித்த விலை அமெரிக்க டொலர் 3.19 ஆக இருந்த போதிலும் 2 ஆவது தடவை கேள்வி கோரும் போது சமர்ப்பித்த விலை அமெரிக்க டொலர் 5.99 ஆனமையின் காரணமாக 1000 ஸ்டிக்கரிகளுக்காக அமெரிக்க டொலர் 2.80 மேலதிகமாக செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முதலாவது வருடத்திற்காக 384 மில்லியன் ஸ்டிக்கர்களுக்காக ஏற்படக்கூடிய நட்டம் மொத்தமாக அமெரிக்க டொலர் 1,075,200 (ரூபா 166.65 மில்லியன் அளவில்) ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.5 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 சனவரி 26 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் தொடர்பாக செயற்குழுவினால் (COPA) திணைக்களங்களுக்காக புதிய கணனி தரவு முறைமையொன்று அமுல்படுத்துவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் மதுவரி திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றுடன் உள்ளக தொடர்புகளை வலைப்பின்னல்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு வரையிலும் இந்த கணனி தரவு முறைமையை அமுல்படுத்துவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) அரசாங்கத்தின் வருமானங்களை அதிகரிப்பதற்காக மதுபான போத்தல் மற்றும் மதுபான போத்தல்களுடன் அண்மித்த உற்பத்திகளுக்காக பாதுகாப்பு ஸ்டிக்கர் வழங்குதல் மற்றும் பாதுகாப்பு ஸ்டிக்கர் முகாமைத்துவ முறைமை ஒன்றை வழங்குதல், ஸ்தாபித்தல் மற்றும் பேணிச் செல்லல் என்பவைகளுக்கான செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகளுக்காக ரூபா 1,597,559 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவை 2018 யூலை 12 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்துவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(இ) 2015 மே 21 ஆந் திகதி ஸ்பிரிட் கம்பனியொன்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதுவரி பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட தவறுகளுக்காக ரூபா 50,620,739 வரித் தொகையொன்று அந்த ஸ்பிரிட் கம்பனி 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன் செலுத்த வேண்டியதாக மதுவரி ஆணையாளரால் அறிவித்தல் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவித்தலுக்கு கம்பனியால் காண்பிக்கப்பட்ட எதிர்ப்புக்களுக்கு திணைக்களத்தால் பரிசோதனைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவினாலும் உரிய பணம் அறவிட வேண்டியதாக சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 யூன் மாதம் வரையிலும் உரிய பணத்தை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஈ) சட்ட விரோதமாக ஸ்பிரிட் இறக்குமதி செய்த கம்பனியொன்று தொடர்பான சுங்க பரிசோதனைக்கு மேலதிகமாக திணைக்களத்தாலும் பரிசோதனையொன்று நடாத்தப்பட்டிருந்ததுடன், அந்த பரிசோதனையில் ரூபா 588,900,344 வரித்தொகையொன்று கம்பனியிலிருந்து அறவிட வேண்டியிருந்தமை 2016 சனவரி 13 ஆந் திகதிய குழுவின் அறிக்கை மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணம் 2017 சனவரி மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அமைச்சரால், இந்தப் பணம் மாதாந்த தவணையாக ரூபா 15,391,208.75 வீதம் 30 தவணைகளில் அறவிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த தீர்மானம் மதுவரி கட்டளைச் சட்டத்தின் (திருத்திய) 22 மற்றும் 32(2) ஆம் பிரிவுகளுக்கு இணங்கியிருந்ததா என்பது பிரச்சினைக்குரிய விடயமாக இருந்தது.

## 2.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையினதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) 2017 மார்ச் 10 ஆந் திகதிய 2009/45 ஆம் இலக்க வர்த்மானி அறிவித்தல் மூலம் விநியோகிக்கப்பட்ட 995 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 4 ஆவது நியதியின் பிரகாரம் இறக்குமதி அனுமதிப்பத்திரமின்றி எந்தவொரு மதுபான வகையும் இறக்குமதி செய்ய முடியாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த அறிவித்தலின் 5 ஆவது நியதியின் பிரகாரம் இறக்குமதி அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் இறக்குமதி செய்யப்பட்டால் வரிக்கு மேலதிகமாக மீ.ற.கெ பெறுமதி அடிப்படையில் 3 சதவீதம் மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு அல்லது இறக்குமதி செய்யப்படுகின்ற மதுபான இருப்பை அரசுடமையாக்குவதற்கு மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களுக்காக 3 சதவீத மிகைக்கட்டணத்தை செலுத்தி விடுவிக்கக்கூடியமை நழுவிச் செல்லும் நிபந்தனையொன்றாக இருந்தமையினால் அதன் மூலம் இறக்குமதியாளர்களைக் கட்டுப்படுத்த முடியுமா என்பது கண்காய்வின் போது பிரச்சினையான விடயமாக இருந்தது. மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 2017 மார்ச் 22 முதல் யூன் 22 வரையான காலத்தில் அவ்வாறு அனுமதியின்றி 4 கம்பனிகளால் 7 சந்தர்ப்பங்களின் போது இறக்குமதி செய்யப்பட்ட

மதுபானங்களின் அளவு 35,851.3 லீற்றர்களிற்காக 3 சதவீத மிகைக்கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) இட அமைவு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட நிலஅளவையாளர் நில வரைபடத் திட்டத்தின் பிரகாரம் 169.98 மீற்றர் தூரத்தில் பாடசாலையொன்று அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கையில் இடத்தைப் பயன்படுத்துவதற்காக பூரணப்படுத்த வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட தூர அளவு போன்ற நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாமல் திஸ்ஸமஹாறாமயில் சினிமா திரையரங்கிற்காக செறிவான வெளிநாட்டு மதுபானம் மற்றும் மதுபான அனுமதிப்பத்திரம் என்பவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 2.7 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலத்தில் திணைக்களத்தில் ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு, பயன்படுத்துதல் மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் என்பன கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 493.96 | 492.52 | 1.44 | 0.29 |
| | மூலதனம் | 174.50 | 172.22 | 2.28 | 1.30 |
| | **மொத்தம்** | **668.46** | **664.74** | **3.72** | **0.55** |
| 2014 | மீண்டெழுபவை | 547.95 | 547.86 | 0.09 | 0.01 |
| | மூலதனம் | 182.50 | 150.42 | 32.08 | 17.57 |
| | **மொத்தம்** | **730.45** | **698.28** | **32.17** | **4.40** |
| 2015 | மீண்டெழுபவை | 666.62 | 665.08 | 1.54 | 0.23 |
| | மூலதனம் | 387.91 | 147.46 | 240.45 | 61.98 |
| | **மொத்தம்** | **1054.53** | **812.54** | **241.99** | **22.94** |
| 2016 | மீண்டெழுபவை | 745.66 | 743.09 | 2.57 | 0.34 |
| | மூலதனம் | 326.77 | 240.88 | 85.89 | 26.28 |
| | **மொத்தம்** | **1072.43** | **983.97** | **88.46** | **8.24** |
| 2017 | மீண்டெழுபவை | 1039.50 | 806.51 | 232.99 | 22.41 |
| | மூலதனம் | 272.52 | 160.36 | 112.16 | 41.15 |
| | **மொத்தம்** | **1312.02** | **966.87** | **345.15** | **26.3** |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை**

(i) உற்பத்தி நிர்ணயம் மற்றும் சுயமாக வரி கணித்தல் முறைமையை செயற்படு நிலைக்கு கொண்டுவரும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது குறைநிரப்பு

மதிப்பீட்டின் மூலம் ரூபா 18.6 மில்லியன் நிதிஏற்பாடு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 06 செலவின விடயங்களுக்காக ரூபா 452 மில்லியன் கூட்டுத்தொகையான மிகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த செலவின விடயங்களிலிருந்து பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 307 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 40 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையிலான வீச்சில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.8 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டிற்காக 2 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 115,035 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 113,259 கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 98 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| வருமானக் குறியீடு | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை (பற்றாக்குறை) | சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 10.02.04.01 | 115,000.00 | 113,214.00 | (1,786.00) | 98 |
| 10.02.06.00 | 35.00 | 45.75 | 10.75 | 130 |

மேற்கூறப்பட்ட வருமானக் கணக்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) 10.02.04.01 என்ற வருமானக் குறியீடு - மதுவரி (மதுபானம்)

பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது செறிவான மதுபான உற்பத்தி குறைவடைந்தமையினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்த வருமான மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. எனினும், 2017 நவம்பர் மாதம் முதல் மதுபானங்களுக்காக அறவிடப்படுகின்ற வரியின் அளவு அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் அதிகரிக்கின்ற வருமானத்தைப் பரீட்சித்து வருமான மதிப்பீட்டைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்குகளின் பிரகாரம் ரூபா 1,233.16 மில்லியன் தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கிடையிலான காலப்பகுதிக்குரியதாகும். நிலுவை வருமானத்தை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(iii) முன்னைய ஆண்டின் உள்ளபடியான வருமானத்தை விட மீளாய்வாண்டில் உள்ளபடியான வருமானம் குறைவடைந்தமை ரூபா 7,024 மில்லியன் ஆக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- உற்பத்திக் கூடத்தில் பூர்த்தி செய்யப்பட்டு அதில் விநியோகிக்கப்பட்ட அனுமதித்த செறிவு மதுசார, மதுபான லீற்றர் ஒன்றுக்கான ரூபா 1,850 வரித்தொகை அறவிடும் கொள்கை 2017 பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் 2017 நவம்பர் மாதம் முதல் ஒவ்வொரு லீற்றருக்கும் ரூபா 3,300 ஆன வரியாக மாற்றப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் உற்பத்தி லீற்றர் 8.6 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

- உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்ற தானிய மதுபானங்களின் உடன் செறிவு 5 சதவீதம் மற்றும் அதற்கு மேற்பட்டதாயின் ஒவ்வொரு லீற்றருக்கும் ரூபா 315 வரியும், உடன் செறிவு 5 சதவீதத்திற்கு குறைவாயின் ஒவ்வொரு லீற்றருக்கும் ரூபா 190 ஆன வரியும் அறவீடு செய்யும் கொள்கை 2017 பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் 2017 நவம்பர் மாதம் முதல் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்ற தானிய மதுபானங்களின் ஒவ்வொரு லீற்றருக்கும் ரூபா 2,400 ஆன வரியாகத் திருத்தப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆதலால், தானிய மதுபான வரி வருமானம் ரூபா 2,795 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும் அவற்றின் உற்பத்தி லீற்றர் 3.7 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

**(ஆ) 10.02.06.00 என்ற வருமானக் குறியீடு - புகையிலை வரி**

---

பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் புகையிலை வரி வருமானத்தின் ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 35 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 45.74 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் இறக்குமதி செய்யப்பட்ட சிகரட் மற்றும் புகையிலை வரி வருமானம் ரூபா 6 மில்லியனால் அதிகரித்தமை இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(ii) திணைக்களத்தினால் சிகரட் ஏற்றுமதிக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் ஏற்றுமதி செய்யப்பட்டதாக அறிக்கை இடப்பட்ட அளவு உள்ளபடியாக ஏற்றுமதி செய்யப்பட்டதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கான திட்டமொன்று திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1999 இன் 08 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 2 ஆவது விரிவின் பிரகாரம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சகல சிகரட்டுக்களுக்கும், சுருட்டுக்களுக்கும், பீடிகளுக்கும் ஆக சகல குழாய் புகையிலை கிலோகிராமுக்காவும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நியதிகளின் மூலம் அமைச்சரால் நிர்ணயிக்கப்பட்ட அந்தந்த அளவின் பிரகாரம் வரியொன்று விதித்து அறவிடப்பட வேண்டும். எனினும், திணைக்களத்தால் புகையிலை வரி சிகரட்டுக்களுக்காக மாத்திரமே அறவிடப்படுகின்றது. அதன் பிரகாரம் திணைக்களத்தால் புகையிலை வரி அதிகாரச்சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்காதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**2.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லை**

திணைக்களத்திற்குரிய 24801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| **செலவினம்** | | **பெறுவனவு** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக்குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 45.00 | 44.57 | 34.00 | 34.43 | 177.00 | 140.08 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,783,872 ஆக இருந்தது. அந்த நிலுவை மீதியில் ரூபா 1,047,185 தொகை 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்ததுடன் ரூபா 543,714 தொகையான மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படாமல் காணப்பட்டது. அந்த நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**2.10 பொது வைப்புக் கணக்குகள்**

02 வருடங்களை விஞ்சிய ரூபா 2.34 மில்லியன் கூட்டுத்தொகையான 45 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.11 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு**

வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 16,866 பெறுமதியான 10 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.12 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும், நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவெடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை, |
| (ஆ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.13 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின்போது ஏற்பட்ட 02 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) இன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டியஅறிக்கை 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.14 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

கணக்கீட்டு உத்தியோகத்தரால் தமது திணைக்களத்தில் நிதிப்பிரமாணம் 128 இல் காண்பிக்கப்பட்டுள்ள சுய கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்றுவதற்காக தமது திணைக்களங்களில் உள்ளகக் கணக்காய்வு அலகு தாபிக்கப்பட வேண்டியமை நிதிப்பிரமாணம் 133 இன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காசு நடவடிக்கைகளுக்குரியதாக தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த மதுவரி வருமானத்தைச் சேகரித்தல், கட்டுநிதிக் கணக்கின் பரிசோதனை, வெகுமதி நிதிய பரிசோதனை, சொத்துக்களின் முகாமைத்துவம் போன்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்குகள் மற்றும் அறிக்கைகளின் நம்பிக்கைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு ஒழுங்கு முறைகளின் மூலம் சரியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் தொடர்ச்சியாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.15 மனிதவள முகாமைத்துவம்**

**2.15.1 நியமிக்கப்பட்ட பதவியணியனர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆனணி படிகளுக்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், வெற்றிடங்கள் மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் ஆளணி சம்பள செலவினத் தொகுதிக்காக ரூபா 656.786 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு நபருக்கான செலவினம் ரூபா 491,974 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 66 | 40 | 26 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 380 | 342 | 38 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 868 | 790 | 106 | 28 |
| (iv) | ஆரம்ப நிலை | 172 | 163 | 09 | - |
| | **மொத்தம்** | 1,486 | 1,335 | 179 | 28 |

இது தொடர்பாக பின்வரும் அவதரிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் நோக்கங்களுக்கு நேரடியாகத் தாக்கமளிக்கின்ற சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலைகளில் 64 பதவிகள் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. அவ்வாறே தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களில் அதிகமானோர் ஓய்வு பெறுவதற்கு அண்மித்ததாக இருக்கின்றமை திணைக்களத்தின் எதிர்கால செயல்முன்னேற்றத்திற்கு பாதகமாக தாக்கமளிக்கும் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) மதுவரி காவலர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை விஞ்சிய மிகை உத்தியோகத்தர்கள் 28 பேர் தொடர்பாக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தின் மதுவரி சார்ஜன் பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 100 ஆக இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பல்வேறு காரணங்களினால் வெற்றிடமான 85 பதவிகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

**2.15.2 பதவியணியினருக்குப் பயிற்சியளித்தல்**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 1335 பதவியணியினர்களில் 47 சதவீதத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கைக்காக ஆகக்குறைந்தது வருடமொன்றிற்கு 8 மணித்தியாலமேனும் பயிற்சி வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக திணைக்களத்திலுள்ள ஊழியர்களுக்கு தேவையான விடயம் சார்ந்த அறிவு, பயிற்சி வழங்குவதன் மூலம் உயர்ந்த செயல்முன்னேற்றமொன்றை அடைந்து கொள்வது தொடர்பில் திணைக்களம் போதியளவில் கவனம் செலுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.